# பெரியார் பல்கலைக்கழகம்

## PERIYAR UNIVERSITY

State University – NAAC A++ Grade – NIRF Rank 94,
State Public University Rank 40 – SDG Institutions Rank Band: 11– 50
Salem – 636 011, Tamil Nadu, India
GST No:33AAAJP0951B1ZP

## விலைப்புள்ளி அறிவிப்பு

எண்: : PU/R/R14-2/R&D/26F135938/000945/2026 நாள்: 27-01-2026

அய்யா/அம்மையீர்,

பொருள்: பெரியார் பல்கலைக்கழகம் – ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி இயக்குநரகம் – அச்சு இயந்திரம் – வண்ண மை உருளைகள் விலைப்புள்ளி அடிப்படையில் கொள்முதல் செய்தல் – விலைப்புள்ளி கேட்பு – தொடர்பாக

பார்வை: இதே எண்ணிட்ட இவ்வலுவலக குறிப்பாணை நாள்: 27.01.2026

*****

பெரியார் பல் கலைக்கழக பதிவாளர் அலுவலகத்தில் உள்ள ஆராய்ச்சி இயக்குநரக Canon C3120 பயன்பாட்டில் உள்ள நகல் எடுக்கும் இயந்திரத்தின் டோனர் விலைப்புள்ளி அடிப்படையில் கொள்முதல் செய் வதற்கு கீழ்க்கண்டவாறு மூடி முத்திரையிடப்பட்ட விலைப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

| Sl..No. | Particulars | Qty | Rate | Amount |
|---|---|---|---|---|
| 1. | Canon C3120 printer with DADF – Toner Black, Yellow, Magenta, Cyan | 1 | | |
| | GST % | | | |
| Grant Total | | | | |

**நிபந்தனைகள்:-**

1. விலைப்புள்ளிகள் 10.02.2026 தேதி அன்று மாலை 3 மணிக்குள் இவ்வலுவலகத்திற்கு வந்து சேர வேண்டும். விலைப்புள்ளிகள் அன்று மாலை 4 மணிக்கு திறக்கப்படும். காலதாமதமாகப் பெறப்படும் விலைப்புள்ளிகள் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
2. தங்கள் நிறுவன முகவரியிடப்பட்ட கடிதத்தில் மேலே கேட்கப்பட்டுள்ள பொருளுக்கு விலையை அளித்து இந்தத் தகவல் கடிதத்தின் நகலை இணைத்து அனுப்ப வேண்டும். ஒன்றுக்கும் மேற்பட்ட பொருட்கள் கேட்கப்பட்டிருப்பின் இதில் கொடுக்கப்பட்டுள்ள வரிசையின்படி விலை குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும்.
3. விலைப்புள்ளியில் ஒவ்வொரு பொருளின் தொகையும் பைசா விகிதத்தில் இல்லாமல் முழுத்தொகையாக (Round Figure) இருக்கவேண்டும். மேலும் மொத்தத் தொகை கண்டிப்பாக எண்ணிலும், எழுத்திலும் எழுதப்பட்டிருக்க வேண்டும். பெரியார் பல்கலைக்கழகப் பதிவாளர் குறிப்பிடும் இடத்தில் பொருட்களைக் கொண்டு வந்து சேர்க்கவேண்டும். விலைப்புள்ளியில்

குறிப்பிடப்படும் தொகையானது வண்டி வாடகை, வரி, காப்பீட்டுக்கட்டணம் உள்ளடக்கியதாக இருக்க வேண்டும்.

4. விலைப்பட்டியலில் (Invoice/Bill) GST வரி தனியே காண்பிக்கப்பட வேண்டும். அவ்வாறு இல்லையெனில் பட்டியல் தொகையில் வரி பிடித்தம் செய்யப்பட்டு மீதித் தொகை வழங்கப்படும்.
5. மேலே கொடுக்கப்பட்டுள்ள பொருளுக்குத் தகுந்த உத்திரவாத காலத்தைக் குறிப்பிட வேண்டும்.
6. விலைப்புள்ளி உறையின் மேல் "ஆராய்ச்சி இயக்குநரக அலுவலகத்திற்கு டோனர் விலைப்புள்ளி அடிப்படையில் கொள்முதல் செய்தல் விலைப்புள்ளி சமர்ப்பித்தல் கடித எண்: PU/R/R14-2/R&D/ 26F135938/000945/2026 சமர்ப்பிக்கப்பட வேண்டிய இறுதி நாள்: 10.02.2026" என்று கண்டிப்பாக எழுதி பதிவாளர் அவர்கள், பெரியார் பல்கலைக்கழகம், சேலம் – 11 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.
7. விலைப்புள்ளியில் எந்தவொரு திருத்தமும் இருக்கக்கூடாது. அவ்வாறு திருத்தம் இருந்தால் அந்த இடத்தில் முறையான சான்றொப்பமிட வேண்டும்.
8. அனைத்து கடிதத் தொடர்புகளுக்கும் இந்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள எண் மற்றும் தேதியைக் குறிப்பிட வேண்டும்.
9. குறிப்பிடப்படும் விலையின் மதிப்பு ஆறு மாத காலம் வரை செல்லதக்கதாக இருக்க வேண்டும். தேவைப்பட்டால் இறக்குமதி உரிமம் வழங்க வேண்டும்.
10. TIN/PAN மற்றும் GST சான்று எண்கள் கட்டாயம் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும்.
11. எவ்வித முன்னறிவிப்புமின்றி விலைப்புள்ளியை இரத்து செய்வதற்குப் பல்கலைக்கழக நிர்வாகத்திற்கு முழு அதிகாரம் உண்டு.

**பதிவாளர்**

Phone: 0427- 2345766, 2346269(Extn:317), Fax: 0427- 2345124
Website: www.periyaruniversity.ac.in